**சுருக்கம்**

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2018–2019–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல் – நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – ஏற்பளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1) துறை**

**அரசாணை(நிலை) எண்.72**

**நாள்: 31.05.2018**
**ஹேவிளம்பி – வைகாசி– 17**
**திருவள்ளுவர் ஆண்டு–2049**

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண். 102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1)துறை, நாள் 15.09.2017.
2. அரசாணை (நிலை) எண். 136, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1)துறை, நாள் 15.11.2017.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க. எண்.22243/2018/NEDM-2, நாள் 19.04.2018.

----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியினை 2017–2018–ஆம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–18–ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஆணைகளும், விரிவான திருந்திய வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

2. 2018–2019–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக 2018–2019–ஆம் ஆண்டிற்கு ரூ.587.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்டதற்கிணங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் 2018–2019–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்குத் தேவையான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுடன் கூடிய செயற்குறிப்பினை அனுப்பி, உரிய ஆணை வெளியிடுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி, அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது :–

(i) 2018–2019–ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்திற்காக நிதி ரூ.587.50 கோடிக்கு (ரூபாய் ஐந்நூற்று எண்பத்தேழு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படுகிறது. அதில் 25% தொகையான ரூ.146.875 கோடி (ரூபாய் நூற்று நாற்பத்தாறு கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) முதற்கட்டமாக விடுவிக்கப்படுகிறது.

(ii) 2018–2019–ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

5. மேலே பத்தி 4(i)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்:–

| | |
|---|---|
| 4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 789 ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – மாநில செலவினங்கள் – JB சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும் பணிகள் (த.தொ.கு 4515-00-789-JB 1606) | ரூ.30,84,37,500/– |
| 4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு –796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் மாநில செலவினங்கள் – JC சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும் பணிகள் (த.தொ.கு 4515-00-796-JC 1609) | ரூ.1,46,87,500/– |
| 4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 800 ஏனைய செலவு மாநிலச் செலவினங்கள் – JF சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும் பணிகள் (த.தொ.கு 4515-00-800-JF 1602) | ரூ. 114,56,25,000/– |
| மொத்தம் | ரூ.146,87,50,000/– |

6. மேலே பத்தி 4 (i) ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு (சென்னை மாவட்டம் நீங்கலாக) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.